**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Proceeture )**
**In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai.**

**CC.No. 589/2018**

**Deposition of LW4 Examined as PW2**

Name : Selvam
Husband / Father Name : Kaliyan
village :
Taluk :
Post :
Religion :
Age :49 /21

Solomnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.12.2021

**முதல் விசாரணை**

நான் சேந்தங்கு வடபாதி தெருவில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். அ–சா 1 மற்றும் பட்டியல் சாட்சி 1 ஐ தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய கேட்டு பரிசீலனைக்கு பின்னர் அனுமதிக்கப்படுகிறது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 14.01.20118 ஆம் தேதி இரவு 8 மணியளவில் எங்கள் ஊரில் கன்னிப்பொங்கல் விழா நடந்தது என்றும் அதில் நிறைய போட்டிகள் நாங்கள் நடத்தினோம் என்றும் அப்போது அங்கு வந்த எங்கள் தெருவை சேர்ந்த 1 வது எதிரி தமிழ்ச்செல்வன். 2 வது எதிரி செந்தமிழனும் அ.சா.1 யும் பட்டியல் சாட்சியான 1 சேகரையும் கெட்ட வார்த்தையால் திட்டினார் என்றும் அதை தட்டிக்கேட்ட சேகரையும் 1 வது எதிரி இரும்பு பைப்பால் சேகரின் தலையில் அடித்தார் என்றும் சேகருக்கு தலையில் காயம் பட்டு கிழே விழுந்துவிட்டார் என்றும் இதை பார்த்து எதிரி 1 தமிழ்செல்வனை பிடிக்க சென்ற அ.சா.1 ஐ 2 வது எதிரி எதிரி 1 ன் கையில் வைத்திருந்த கம்பி பைப்பை பிடிங்கி அ.சா.1 யும் தாக்கினார் என்றும் அதில் அ.சா.1 க்கு காயம் ஏற்பட்டது என்றும், அறிவழகனுக்கும் காயம் ஏற்பட்டது. இதை பார்த்த எங்கள் ஊர்காரர்கள் அ.சா.1, பட்டியல் சாட்சி –1 மற்றும் அறிவழகன் ஆகியோர்களை மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம் என்றும், அப்போது இந்த சம்பவத்தில் காயம்பட்ட சேகரை திருவாரூர் மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்கு அனுப்பினார்கள் என்றும், அ.சா.1, பட்டியல் சாட்சி 1 பேச முடியாத நிலையில் இருந்ததால் புகார்வாக்குமூலம் அறிவழகன் கொடுத்தார் என்றும் போலிஸ் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் சொல்லிவிட்டு எதிரிகள் ஊர்காரர்கள் என்பதால் எதிரிகளுக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக சாட்சியம்அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது–